IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S .No.59 of 2014
Deposition of witness for DW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கண்ணபிரான் | Caste | : | |
| Father Name | : | சுப்ரமணி | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of June, 2026.

## குறுக்கு விசாரணை:

1. நான் பிராமண வாக்குமூலத்தில் குறிப்பிட்ட முகவரியில் நான் பிறந்ததுதில் இருந்து இருக்கிறேன். 2017 ல் இருந்து நாட்டாமையாக இருக்கிறேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 2011 ல் இருந்து 2016 வரை நாட்டாமை இருக்கிறேன் என்று குறிப்பிட்ட உள்ள நிலையில் தற்போது பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் 2011 ல் நாட்டாமையாக இருந்து வருகிறேன். நான் நாட்டாமை என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்கெல்லாம் ஆவணம் கிடையாது. எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் பொது மேடைக்கு அருகில் உள்ள இடமானது வாதிக்கு சொந்தமில்லை. அது பொது சொத்து ஆகும். தாவா சொத்து வாதியுடைய மூதையார் சொத்து என்று சொன்னால் சரியல்ல.

2. பொது சொத்து என்று நான் சொல்வது பொய் என்றாலும் தாவா சொத்திற்கு பட்டா உள்ளது என்று சொன்னாலும் சரியல்ல. அந்த பட்டாவனது பொய்யாக தயாரிக்கப்பட்டது ஆகும். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 4ம் பத்தியில் 23.11.2016 ல் வாதியுடைய கணவர் ஒப்புதல் கடிதம் கொடுத்ததாக நான் குறிப்பிட்ட உள்ள நிலையில்

அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து முழுவதும் வாதிக்கும், அவருடைய மூதையாருக்கும் சொந்தம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பொது சொத்து என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் அனைத்தும் தாக்கல் செய்துள்ளோம். 09.12.2013 ல் வாதியிடம் தகராறு செய்து அவர்கள் எங்கள் மீது கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார் என்றால் எங்கள் மீது கொடுக்கவில்லை. வாதிக்கும் எங்களுக்கும் முன்விரோதம் இருந்ததால் இவ்வாறு பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்தில் இன்று வரை வாதியும் அவருடைய குடும்பத்தாரும் தான் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் இல்லை. தாவா சொத்தில் சுவர் போடப்பட்டுள்ளது. அதற்குண்டான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கிற்காக நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF,
KATPADI.